Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
STC No.2015/2022 Date: 11.05.2026
Deposition of witness for prosecution: PW 5 ( LW2 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | தங்கமலை | Caste | --- |
| Father/ Husband Name | அம்மாவாசை | Calling | கூலி |
| Village | கம்பம் | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 59 /2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 11.05.2026 TIME 02.00PM

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

எனது மகள் லாவண்யா என்பவரை ஜெகதீஸ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன். எனது மருமகன் ஜெகதீஸ்வரன் கம்பத்தில் இருந்து அவர் வேலை செய்த சர்க்கரை ஆலைக்கு தினச்சரி செல்வது வழக்கம். அது போல் கடந்த 04.04.2022-ம் தேதி காலை 07.00 மணியளவில் எனது மருமகன் கிளம்பியுள்ளார். நானும், எனது மகனும் சின்னமனூருக்கு ஒரு வேலை நிமித்தம் வந்துயிருந்தோம். சுமார் 07.15 மணியளவில் எனது மருமகன் செல்போனில் இருந்து, எனக்கு அழைப்பு வந்தது. காமாட்சிபுரம் அருகே வரும் போது எனது மருமகனுக்கு அரசு பேருந்து மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறினார். எனது மருமகன் காயம்பட்டு கிடப்பதாகவும் சொன்னார். நான் உடனே அங்கு சென்று பார்த்த போது எனது மருமனுக்கு வலது கையில் காயமும், இடது தோள்பட்டையில் எலும்பு முறிவும், வயிற்றில் காயமும், வலது முழங்காலிலும் காயங்கள் இருந்தன, பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்குயிருந்து மேல்சிகிச்சைக்காக தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சிகிச்சையில் இருந்த போது போலிசார் விசாரித்தார்கள். சிகிச்சை முடித்து எனது மருமகன் வந்துவிட்டார். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் சென்று பார்த்த போது, அருகில் இருந்த ஊரைச்சேர்ந்த நபர்கள் எனதுமருமகனுடன் இருந்தார்கள். நான் சொல்வது போல் விபத்து சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.